**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: CC –12/2021**

**வழக்கு சாட்சி : LW17 (PW6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அப்துல் ரகுமான் | தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர், குற்ற புலனாய்வு பிரிவு, புதுக்கோட்டை |
| தந்தை பெயர் | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**எதிரி ஆஜர்**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 27th day of February 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :–**

1. நான் தற்போது காவல் துணை கண்காணிப்பாளராக குற்ற புலனாய்வு பிரிவு, புதுக்கோட்டையில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 02.06.2020 ம் தேதி இலுப்பூர் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கூடுதல் பொறுப்பாக அன்னவாசல் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பொறுப்பில் இருந்தேன் . காவல் உதவி ஆய்வாளர் அன்னவாசல் திரு.வீரமணி என்பவர் நிலைய குற்ற எண். 287/2020 இதச சட்டபிரிவு 304(A) ன் கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து என்னுடைய பார்வைக்கு அன்றைய தினமே வழக்கு கோப்பினை எடுத்துக் கொண்டு அன்று இரவு நேரம் என்பதால் 03.06.2020 ம் தேதி அதிகாலை 06.00 மணிக்கு சம்பவ இடமான புதுக்கோட்டை to பெருமாநாடு ரோடு முருகேசன் வீட்டிற்கு எதிரில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ராமையா, ரவிக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரிவரைபடம் , பார்வை மகஜர் தயார் செய்து, பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் கேட்டு பெற்று தனித்தனியாக பார்வை மகஜர் தயார் செய்தேன். **என்னால் தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் அ.சா.ஆ 4 மற்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகும்.**

2. பின்னர் இவ்வழக்கின் புகார்தாரர் இறந்த குழந்தையின் அத்தை பரமேஷ்வரி என்பவரை விசாரித்து பின்னர் சம்பவத்தை உறுதி செய்வதற்காக கண்ணுற்ற சாட்சிகளான அம்பிகாவதி, ஆசைத்தம்பி, திருமாயி ஆகியோர்களை விசாரித்து

சம்பவத்தை உறதி செய்து இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தையும், இலுப்பூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு தலைமைக் காவலர் கௌசல்யா அவர்களுக்கு வேண்டுகோள் கடிதத்தினை அனுப்பி வைத்து பின்னர் இவ்வழக்கின் இறந்த நபரின் பிரேதத்தினை புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து சாட்சிகள் ராஜேஷ், கிருஷ்ணசாமி, ராமசாமி, குமரேசன் ஆகியோர்களை விசாரித்தும், கேள்விப்படட சாட்சிகளான முருகேசன், கிருஷ்ணவேணி ஆகியோர்களை அதே இடத்தில் விசாரித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து பிரேதத்தினை இவ்வழக்கில் இறந்த ராஜாங்கம் மனைவி பரமேஷ்வரியிடம் ஒப்படைத்து பின்னர் இவ்வழக்கின் மோட்டர் வாகன ஆய்வாளர் வாகன பதிவு எண் TN 55 AJ 6979 என்ற பொலிரோ காரை ஆய்வு அறிக்கை தயார் செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. சசிக்குமார் என்பவரை விசாரித்தும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றும் புலன் விசாரணை நிலுவையில் இருந்த போது விபத்து ஏற்படுத்திய நபரை தேடிய போது புகழேந்தி என்பவர் 05.06.2020 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு தானாகநிலைய்ம் அஜரானவரை குற்ற காரணம் கூறி கைது செய்து தக்க இரு நபர் ஜாமினில் விடுவித்தேன்.

3. பின்னர் இறந்த ராஜாங்கத்தை பிரேத கூறாய்வு செய்த மருத்துவர் வள்ளியப்பன் என்பவரை விசாரித்து பிரேத கூறாய்வு அறிக்கை பெற்று மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கும், ( மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் பிரேத கூறாய்வு அறிக்கை BNSS பிரிவு 330(3) ன் கீழ் எதிரி தரப்பில் ஆட்சேபனை இன்றி அரசு தருப்பில் குறியீடு செய்யப்படுகிறது. **அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 6 ஆகவும், பிரேத கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** மேலும், பிரேத விசாரணைக்ககாக வேண்டுகோள் கடித்தத்தை அனுப்பி வைத்த பெண் காவலர் 1813 கௌசல்யா என்பவரை விசாரித்து மு தல் தகவல் அறிக்கை பதிவு செ ய்த உதவி ஆய்வாளர் வீரமணி என்பவரை விசாரித்து இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதே சட்டப்பிரிவின் கீழ் சமூகம் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

1. இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகள் அனைவரிடமும் நான் விசாரித்து 161 வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 1 பரமேஷ்வரி அவரது 161 வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த இடத்தில் தான் இருந்ததாகவும், சம்பவத்தை தான் நேரடியாக பார்த்ததாகவும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பொதுவாக சின்ன குழந்தைகளுக்கு சாலை விதிகள் குறித்து தெரியாது என்றால் சரிதான். பொதுவாக ஒரு குழந்தை ரோட்டை கடக்கும் போது அவரது உறவினர்கள் அழைத்து சென்று கடக்க வைப்பார்கள் என்றால் குழந்தையின் அருகில் இருந்தால் அழைத்து செல்வார்கள். எனது விசாரணையிலோ அல்லது புகார் வாக்குமூலத்திலோ அ.சா.1 பரமேஷ்வரி தான் ரோட்டிற்கு தென்புறம் நின்று போன் பேசிக் கொண்டிருந்தபோது தன்னை பார்ப்பதற்காக ரோட்டை குறுக்காக கடக்க ஓடி வரும் போது தான் விபத்து ஏற்பட்டது என சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. பட்டியல் சாட்சிகள் அம்பிகாவதி, ஆசைத்தம்பி ஆகியோர்கள் எனது விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்தில் அ.சா.1 பரமேஷ்வரி இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்,ஆனால் அந்த தகவலை பரமேஷ்வரியிடம் சொல்லிவிட்டு பிறகு பிரேதத்தை சவக்கிடங்கில் வைத்து விட்டோம்

என மேற்கண்ட சாட்சிகள் சொல்லியுள்ளார்கள். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடம் கடைகள் அதிகமாக உள்ள பகுதி மற்றும் வளைவான பகுதி என்றால் வீடு, கடைகள் அதிகமாக உள்ள பகுதி ஆகும் , ஆனால் வளைவான பகுதி இல்லை. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய சாலை வளைவாக உள்ளது போன்று வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சம்பவ இடத்தில் இருந்து சுமார் 100, 150 அடி தூரம் தள்ளி வளைவாக செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3. மேற்சொன்ன சுமார் 100, 150 அடி தூரம் குறித்து வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றாலும், அனுமானத்தின் அடிப்படையில் 100,150 அடி இருக்கும் என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அவ்வளவு தொலைவு வரைபடத்தில் குறிப்பிடவேண்டியது இல்லை என்பதால் காட்டவில்லை. வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லக்கூடிய பொலிரோ வாகனத்தின் ஓட்டுநரின் பெயர், ஊர் , விவரம் தகப்பனார் பெயர் மற்றும் வாகன எண் போன்றவைகள் எனக்கு தெரியாது என எனது விசாரைணயில் சொல்லியுள்ளாரா என்றால் வாகன எண் TN 55 AJ 6979 என்ற பொலிரோ காரை ஓட்டி வந்தவர் என குறிப்பிட்டுள்ளார்.

4. எனது விசாரணையில் பொலிரோ வாகனத்தின் ஓட்டுநரின் விலாசம் , பெயர் போன்ற விவரங்கள் அ.சா.1 ற்கு யார் சொல்லி தெரியும் என்ற விவரத்தை தெரிந்து வந்ததா என்றால் அது பற்றி அ.சா.1 என்னிடம் எதுவும் குறிப்பிடவில்லை, தெளிவாக எதிரியின் பெயரை குறிப்பிட்டுள்ளார். சம்பவத்தை பொறுத்து வாகனத்தின் ஓட்டுநரின் விலாசம் , பெயர் போன்ற விவரங்களை எனது மாமா ராஜேந்திரன் என்பவர் சொல்லி தான் தெரிந்து கொ்ண்டேன் என்ற விவரத்தை அ.சா.1 அவரது புகார் வாக்குமூலத்திலும், எனது விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 கொடுத்த எழுத்துப் பூர்வமான புகாரைப் பெற்று முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் அ.சா.1 எந்த விதமான எழுத்துப் பூர்வமான புகாரை கொடுக்கவில்லை என்றாலும், வழக்கின் தோதிற்காக புகார் கொடுத்தாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தாக சொல்லக்கூடிய பட்டியல் சாட்சிகள் 2 அம்பிகாவதி, 3 ஆசைதம்பி ஆகியோர் எனது விசாரணையில் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லக்கூடிய பொலிரோ வாகனம் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார்கள் என்றால் கிழக்கில் இருநது மேற்கு நோக்கி வந்ததாக சொல்லியுள்ளார்கள். அ.சா.1 மற்றும் மற்ற சாட்சிகள் அனைவரும் விபத்தில் இறந்ததாக கூறப்படும் குழந்தை எந்த திசை நோக்கி சென்றதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் வடக்கில் இருநது தெற்கு நோக்கி வந்து சாலையின் இடதுபுறம் முருகேசன் என்பவர் வீட்டிற்கு எதிர்புறம் வந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள். சாட்சிகள் எனது விசாரணையில் ரோட்டை குறுக்காக கடக்கும் போது விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துளளார்கள் என்றாலும, நான் வழக்கிற்காக ரோட்டைகடந்த பிறகு இடதுபுறம் விபத்து ஏற்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. புதுக்கோட்டையில் இருந்து குடுமியான்மலை நோக்கி வந்ததாக சொல்லப்படுவது கிழககில் இருந்து மேற்கு நோக்கி வரும் திசையை குறிக்கிறது

என்றால் சரிதான். குடுமியான்மலையில் இருந்து புதுக்கோட்டை நோக்கி வந்ததாக சொல்லப்படுவது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வரும் திசையை குறிக்கிறது என்றால் இருக்கலாம். பட்டியல் சாட்சி 3 ஆசைத்தம்பி எனது விசாரணையில் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்தில் தான் நின்று கொண்டிருந்த போது குடுமியான்மலையில் இருந்து புதுக்கோட்டை நோக்கி வந்து கொண்டிருந்த கார் மோதி விபத்து ஏற்பட்டது என குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. எனது விசாரணையில் குடுமியான்மலையில் இருந்து புதுக்கோட்டை நோக்கி வந்த கார் தான் மோதி விபத்து ஏற்பட்டதாக பட்டியல் சாட்சி 3 கூறினார் என்றாலும், நான் வழக்கின் தோதிற்காக புதுக்கோட்டையில் இருந்து குடுமியானமலை நோக்கி வந்ததாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. சாட்சிகள் அனைவரும் அ.சா.1 ன் உறவினர்கள் என்ற விவரம் எனது புலன் விசாரணையில் தெரிய வந்ததா என்றால் எனது விசாரணையில் சொல்லவில்லை. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது காவல் உதவி ஆய்வாளர் என்றால் சரிதான். காவல் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து, அதன் அசல் இலுப்பூர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என கூறி என்னிடம் மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை ஒப்படைத்தார் என்றால் நான் வழக்கை கோப்பிற்கு எடுத்துக் கொண்ட போது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல் இருநதது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதா என்பது பற்றி நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் தெரிந்து கொள்ளவில்லை, முதல் தகவல் அறிக்கையிலேயே நீதிமன்றத்திற்கு அனுப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

8. நான் சொல்வது போல் காவல் உதவி ஆய்வாளர் வழக்கு கோப்பை என்னிடம் ஒப்படைப்பதற்கு முன்பு முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றாலும், வழக்கிற்காக அனுப்பப்பட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகாரில் முதல் பக்கத்திலோ அல்லது இரண்டாவது பக்கத்தில் கையெழுத்திற்கு கீழோ எந்த தேதியில் புகார் கொடுத்தார்கள் என தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இறந்து போன குழந்தையின் பெற்றோர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, சேர்த்துள்ளேன். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்தில் உள்ள வீடுகள், கடைகளில் உள்ள நபர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, ராமசாமி, ராமையா , திருமாயி என்பவர்களை சேர்த்துள்ளேன்.

9. நான் சொல்வது போல் இந்த வழக்கிற்கும், பொலிரோ வாகனத்தின் ஓட்டுநருக்கு ம் எந்த சம்மந்தமும இல்லை என்றாலும் சரியல்ல. பொலிரோ வாகனத்தின் ஓட்டுநர் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சாலை விதிகளை கடைபிடித்து மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள கடைவீதி என்பதால் மெதுவாக வந்துள்ளார் என்றாலும், அதிக வாகனங்கள் அந்த பகுதியில் வரும் என்பதால் எதிரே உள்ள தனது அத்தையை பார்ப்பதற்காக குறுக்காக கடந்த போது ஏற்பட்ட வாகன விபத்தில் முறையான முதல் விசாரணை செய்யாமல் இழப்பீடு பெறுவதற்காக கொடுக்கப்பட்ட புகாரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு இறுதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. வழக்கு சம்பவத்திற்கு முதன்மை காரணம் விபத்தில் இறந்து போன குழந்தையின் அத்தை போன் பேசாமல் ரோட்டை கடந்து குழந்தையை பிடித்திருந்தால் விபத்து நடந்திருக்காது என்றாலும் சரியல்ல. அ.சா. 1 போன் பேசிக் கொண்டு இருந்த அஜாக்கிரதையனால் இந்த வழக்கு சம்பவம் நடைபெற்றது என்றால் சரியல்ல. அ.சா.3 நீதிமன்ற விசாரணையில் குறிப்பிட்டது போல் குடுமியான்மலையில் இருந்து புதுக்கோட்டை நோக்கி சென்ற வாகனம் யாருடையது என்பது பற்றியும் எனது விசாரணையில் முறையாக செய்ந்திருந்தால் குழந்தை மீது மோதிய வாகனத்தின் விவரங்கள் தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கம் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.